ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1837/14 - 2013 නොවැම්බර් මස 20 වැනි බදාදා - 2013.11.20

1837/14 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I)- பொது

அரசாங்க அறிவித்தல்கள்

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்

அறிவித்தல்

இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காகவும், வருமான வரிகளை செலுத்தாது தட்டிக் கழிப்பதனை தடுக்கும் வகையிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சீசெல்ஸ் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் 2011.09.23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட, இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இரு தரப்பு ஒப்பந்தத்திற்கு 2013.10.23 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் படி பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதனை 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 97(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பீ. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2013, நவெம்பர் 19.

வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்குமாகவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சீசெல்ஸ் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கமும் சீசெல்ஸ் குடியரசின் அரசாங்கமும் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டைவரி விதிப்பனைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் கீழே காட்டப்பட்டுள்ளவாறு உடன்பாடு கண்டுள்ளன.

உறுப்புரை 1

உள்ளடக்கப்படும் ஆட்கள்

ஒப்பந்த அரசுகளில் ஒன்றின் அல்லது இரண்டிலும் வதியும் ஆட்களின் மீது இவ் ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

உறுப்புரை 2

உள்ளடக்கப்படும் வரிகள்

1. ஒப்பந்த அரசு ஒன்றின் சார்பில் விதிப்பனவு செய்யப்படும் வருமானம் மீதான வரிகள் தொடர்பில், அவை அறவிடப்படும் முறைகளைக் கவனத்தில் எடுக்காது, இவ் ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

2. மொத்த வருமானத்தின் மீது அல்லது அதன் ஒரு பகுதியின் மீது விதிப்பனவு செய்யப்படும் அனைத்து வரிகளும் வருமானத்தின் மீதான வரிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

3. இந்த ஒப்பந்தம் ஏற்புடையதாகும் தற்போது நடைமுறையிலுள்ள பின்வரும் வரிகளாவன:

(அ) இலங்கையில்,

(i) முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சிகளின் புரள்வின் அடிப்படையிலான வருமானவரி உள்ளிட்ட வருமான வரி மற்றும்

(ii) வருமான வரியுடன் தொடர்புடைய வகையில் 2005 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழ் விதிப்பனவு செய்யப்படும் சமூகப் பொறுப்பு வரி என்பனவாகும்.
(இதன் பிற்பாடு "இலங்கை வரி" என்று அழைக்கப்படும்)

(ஆ) சீசெல்ஸ் குடியரசில்,

(i) வியாபார வரி; மற்றும்

(ii) பெற்றோலிய வருமான வரி என்பவற்றையும் குறிக்கும்.
(இதன் பிற்பாடு "சீசெல்ஸ்" வரி என்று அழைக்கப்படும்)

4. தற்போது நடைமுறையிலுள்ள வரிகளுக்கு மேலதிகமாக அல்லது அவற்றுக்குப் பதிலாக இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியின் பின்னர் வருமானத்தின் மீது விதிப்பனவு செய்யப்படும் அதற்குச் சமனான அல்லது பெருமளவில் சமனான வேறு ஏதேனும் வரிகள் தொடர்பிலும் இவ் ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும். ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் தங்களது வரிவிதிப்பனவுச் சட்டங்கள் தொடர்பில் செய்யப்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் தொடர்பில் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் அறியச் செய்தல் வேண்டும்.

உறுப்புரை 3

பொது வரைவிலக்கணங்கள்

1. இவ் ஒப்பந்த நோக்கங்களுக்காக, சொல்லமைவின் படி வேறு விதமான கருத்து தேவைப்பட்டாலன்றி :

(அ) "இலங்கை" என்ற சொல் சர்வதேச சட்டத்திற்கும் அதன் தேசிய அரசியலமைப்புக்களுக்கும் இணங்க, இலங்கை தனது இறைமை உரிமைகளையும் நீதிமன்ற நியாயாதிக்கத்தையும் அமுல்படுத்துகின்ற அல்லது இதற்குப் பிறகு அமுல்படுத்தும் சாத்தியமுள்ள அதன் நிலப் பிரதேசம், உள்ளக நீர் நிலைகள், அரசுக்குச் சொந்தமான கடற் பிரதேசம், அதற்கு மேல் அமைந்துள்ள வான்வெளி என்பனவும் பிரத்தியேக பொருளாதார வலயம், கண்டமேடை என்பனவும் உள்ளிட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குச் சொந்தமான எல்லைகளைக் குறிக்கும் ;

(ஆ) "சீசெல்ஸ்" என்ற சொல் ஐக்கிய நாடுகள் சபையின் கடல்சார் சட்டங்கள் தொடர்பான ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க சீசெல்ஸ் குடியரசின் இறைமை மற்றும் நீதிமன்ற அதிகாரங்கள் செயற்படுகின்ற பொருளாதார வலயம் கண்ட மேடை உள்ளிட்ட "சீசெல்ஸ்" குடியரசுக்கு சொந்தமான எல்லைகளைக் குறிக்கும்.

(இ) "ஒப்பந்த அரசு" மற்றும் "மற்றைய ஒப்பந்த அரசு" என்ற சொற்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சீசெல்ஸ் குடியரசை அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசைக் குறிக்கும்;

(ஈ) "ஆள்" – என்ற சொல் ஆட்களையும் கம்பனிகளையும் ஆட்களின் சபைகளையும் குறித்த ஒப்பந்த அரசில் நடைமுறையில் உள்ள வரி விதிப்புச் சட்டங்களின் கீழ் வரி அறவிடத்தக்க எந்த ஒரு நிறுவனத்தையும் குறிக்கும்;

(உ) "கம்பனி" என்ற சொல் கூட்டிணைக்கப்பட்ட சபை ஒன்றை அல்லது வரி நோக்கங்களுக்காக ஒரு சபையாகக் கருதப்படுகின்ற நிறுவனங்களைக் குறிக்கும் ;

(ஊ) "தொழில் முயற்சி" என்ற சொல் ஏதேனும் வியாபாரமொன்றைக் கொண்டு நடாத்துவதைக் குறிக்கும் ;

(எ) "ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி" மற்றும் "மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சி" என்ற சொற்கள் முறையே ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில் முயற்சியையும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில் முயற்சியையும் குறிக்கும் ;

(ஏ) "சர்வதேச போக்குவரத்து" என்ற சொல் ஒப்பந்த அரசு ஒன்றில் அமைந்துள்ள தொழில் முயற்சி ஒன்றினால் இயக்கப்படுகின்ற கப்பல் அல்லது விமானம் ஒன்று, அக்கப்பல் அல்லது அவ்விமானம் மற்றைய ஒப்பந்த அரசின் நிலையங்களுக்கு இடையில் மாத்திரம் நடாத்துகின்ற சந்தர்ப்பங்கள் தவிர்ந்த எந்தவொரு போக்குவரத்தையும் குறிக்கும்.

(ஐ) "நாட்டினத்தவர்" என்ற சொல்:

(i) ஒப்பந்த அரசு ஒன்றில் நாட்டினத்துரிமை பெற்றுள்ள எந்தவொரு ஆளையும்,

(ii) ஒப்பந்த அரசு ஒன்றில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் ஊடாக குறித்த சட்ட அந்தஸ்தினை பெறுகின்ற எந்தவொரு சட்டரீதியான ஆளையும் அல்லது பங்குடமையையும் அல்லது சங்கத்தையும் குறிக்கும்.

(ஒ) "தகவுடைய அதிகாரி" என்ற வாசகம்:

(i) இலங்கையின் விடயத்தில் "உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தை" அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பெற்ற பிரதிநிதியை;

(ii) சீசெல்ஸ் விடயத்தில் நிதி அமைச்சரை அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பெற்ற பிரதிநிதியை குறிக்கும்.

(ஓ) "வியாபாரம்" என்ற சொல் உயர்தொழில் சேவைகளையும் சுயாதீன ஆளொருவரினால் மேற்கொள்ளப்படும் வேறு செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

(ஔ) "வரி" என்ற சொல் தேவைக்கு ஏற்ப இலங்கை வரியை அல்லது சீசெல்ஸ் வரியைக் குறிக்கும். எனினும் இந்த ஒப்பந்தம் ஏற்புடையதாகும் வரிகளுடன் தொடர்புடைய ஏதேனும் தட்டிக் கழிப்புக்கள் அல்லது கழிப்பனவுகள் தொடர்பில் செலுத்த வேண்டிய ஏதேனும் ஒரு தொகை அல்லது இவ்வரிகளுடன் தொடர்புடைய வகையில் விதிக்கப்பட்ட ஏதேனும் ஒரு தண்டனையை பிரதிநிதித்துவம் செய்யும் தொகை இதில் உள்ளடங்கமாட்டாது.

(க) "நிதியாண்டு" என்பது:

(i) இலங்கையின் விடயத்தில் ஏப்பிறல் 01 ஆந் திகதி ஆரம்பிக்கும் வருடத்தையும்,

(ii) சீசெல்ஸ் குடியரசின் விடயத்தில் சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கும் வருடத்தையும் குறிக்கும்.

2. ஒப்பந்த அரசு ஒன்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் இவ் ஒப்பந்தத்தினை ஏற்படையதாக்குகையில், இதில் வரைவிலக்கணம் கூறப்படாத ஏதேனும் ஒரு சொல்லை, அதன் சொல்லமைவின் படி வேறு விதமாக பொருள் கொள்ள வேண்டிய அவசியம் இருந்தாலேயன்றி, இவ் ஒப்பந்தத்துடன் தொடர்புடைய வரி நோக்கங்களுக்காக அவ் அரசின் சட்டத்தின் கீழ் அச்சந்தர்ப்பத்தில் கொண்டுள்ள கருத்தையே கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அவ் அரசில் நடைமுறையிலுள்ள வரிச் சட்டங்களின் கீழ் அச்சொல் கொண்டுள்ள கருத்துக்கள், அவ் அரசின் ஏனைய சட்டங்களின் கீழ் அச்சொல் கொண்டுள்ள கருத்துக்களை விஞ்சி ஏற்புடையதாகுதல் வேண்டும்.

உறுப்புரை 4

வதிபவர்

1. இந்த ஒப்பந்த நோக்கங்களுக்காக "ஒப்பந்த அரசில் வதிபவர்" என்ற சொல் அவ் அரசின் சட்டத்தின் கீழ் எவரேனும் ஆளொருவரின் நிரந்தர வதிவு, வதிவிடம், கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட நிலையம், முகாமை நிலையம் அல்லது அத்தகைய தன்மையைக் கொண்ட வேறு ஏதேனும் அளவுகோள்களின் அடிப்படையில் இலங்கையில் வரி விதிப்பனவுக்குள்ளாகும் எந்தவொரு நபரையும் குறிக்கும். எவ்வாறாயினும், அவ் அரசின் மூலங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானம் தொடர்பில் மாத்திரம் அவ் அரசினுள் வரி விதிப்புக்குள்ளாகும் எந்தவொரு ஆளையும் இவ்வாசகம் குறிக்க மாட்டாது.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எவரேனும் ஆளொருவர் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வதிபவராக இருக்குமிடத்து, அவரின் நிலை தொடர்பில் கீழே உள்ளவாறு தீர்மானித்தல் வேண்டும்.

(அ) அவருக்கு நிரந்தர வதிவிடம் உள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுவார். மேலும் அவருக்கு இரு அரசுகளிலும் நிரந்தர வசிப்பிடம் காணப்படுமாயின், அவருக்கு மிகவும் நெருக்கமான தனிப்பட்ட மற்றும் பொருளாதாரத் தொடர்புகள் காணப்படுகின்ற (அவரது மிக முக்கியமான தொடர்புகளின் மத்திய நிலையமாகவுள்ள) அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) அவரது மிகவும் முக்கியமான தொடர்புகளின் மத்திய நிலையமாகவுள்ள அரசினைத் தீர்மானிக்க முடியாதவிடத்து, அல்லது ஒரு அரசிலேனும் அவருக்கு நிரந்தர வதிவிடம் எதுவும் காணப்படாதவிடத்து, அவர் வழமையாக வதியும் வதிவிடமுள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) அவருக்கு இரண்டு அரசுகளிலும் வழமையாக வதியும் வதிவிடங்கள் காணப்படுமிடத்து அல்லது ஒன்றிலேனும் அவ்வாறான ஒன்று காணப்படாதவிடத்து, அவர் நாட்டினத்தவராகவுள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதுதல் வேண்டும் ;

(ஈ) அவர் இரு அரசுகளிலும் நாட்டினத்தவராக இருப்பின் அல்லது அவற்றில் ஒன்றிலேனும் நாட்டினத்தவராக இல்லாதவிடத்து, இவ்விடயத்தை ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

3. 1ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் காரணமாக தனியாளொருவர் அல்லாத ஆளொருவர் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வதிபவராக இருப்பின், செயற்பாட்டு முகாமை நிலையம் அமைந்துள்ள அரசில் மாத்திரமே வதிபவராகக் கருதுதல் வேண்டும். செயற்பாட்டு முகாமை நிலையம் அமைந்துள்ள அரசைத் தீர்மானிக்க முடியாதவிடத்து இவ் விடயத்தை ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் தீர்மானித்துக்கொள்ளல் வேண்டும்.

உறுப்புரை 5

நிரந்தரத் தாபனம்

1. இவ் ஒப்பந்தத்தின் நோக்கங்களுக்காக "நிரந்தரத் தாபனம்" என்னும் சொல், தொழில் முயற்சியொன்றின் வியாபாரச் செயற்பாடுகள் முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டு நடாத்தப்படும் நிலையான வியாபார நிலையத்தைக் குறிக்கும்.

2. "நிரந்தரத்தாபனம்" என்னும் சொல் குறிப்பாகப் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் –

(அ) முகாமை நிலையம் ;

(ஆ) கிளை ;

(இ) அலுவலகம் ;

(ஈ) தொழிற்சாலை ;

(உ) வேலைத்தளம் ;

(ஊ) சுரங்கம், எண்ணெய் அல்லது வாயுக் கிணறு, கற்குழி அல்லது இயற்கை வளத்தை அகழும் வேறு நிலையம் ;

(எ) ஆளொருவர் பிறருக்கு களஞ்சிய வசதிகளை வழங்கும் களஞ்சியசாலை ;

(ஏ) பண்ணை, பெருந்தோட்டம் அல்லது விவசாயம், காட்டாக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தும் வேறு நிலையம் ;

(ஐ) விற்பனை விநியோக நிலையமாக அல்லது கட்டளைகள் கோருகின்ற அல்லது பெறுகின்ற நிலையமாகப் பயன்படுத்தப்படும் வேறு ஏதேனும் நிலையம்;

3. இதே போன்று "நிரந்தரத் தாபனம்" என்னும் சொல் பின்வருவனற்றையும் உள்ளடக்கும் –

(அ) கட்டட வேலைத்தளம், நிர்மாணம், ஒன்றுசேர்க்கும் அல்லது பொருத்தும் செயற்திட்டம், இயற்கை வளங்களைக் கண்டுபிடித்தல் அல்லது அபிவிருத்தி செய்தலுக்காகப் பயன்படுத்தப்படும் தோண்டும் மேடை அல்லது கப்பல், அவற்றுடன் தொடர்புடைய மேற்பார்வைச் செயற்பாடுகள் அடங்கலாக, எனினும் அவ்வேலைத்தளம் அல்லது செயற்திட்டம் அல்லது அதன் செயற்பாடுகள் 12 மாத காலப்பகுதியினுள் 183 நாட்களுக்கு மேற்பட்ட காலம் தொடருமாயின் மாத்திரம்.

(ஆ) ஒரு தொழில் முயற்சி, மேற்படி நோக்கங்களுக்காக ஊழியர்களை அல்லது வேறு ஆளணியினரைப் பயன்படுத்தி ஆலோசனைச் சேவைகள் அடங்கலாக சேவைகளை வழங்குதல், எனினும் அத்தகைய தன்மையைக் கொண்ட செயற்பாடுகள் நாட்டின் உள்ளே உரிய நிதியாண்டு ஆரம்பிக்கும் அல்லது பூர்த்தியடையும் ஏதேனும் பன்னிரண்டு மாத கால எல்லையினுள் மொத்தமாக 183 நாட்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் அல்லது காலப்பகுதிகளில் தொடருமாயின் மாத்திரம்.

(இ) எவரேனும் ஆளொருவர் சுயாதீன அடிப்படையிலான உயர்தொழில் சேவையொன்றை அல்லது வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், எனினும் அச்சேவை அல்லது செயற்பாடுகளை ஒப்பந்த அரசு ஒன்றில் குறித்த நிதி வருடத்தில் ஆரம்பிக்கும் அல்லது முடிவடையும் ஏதேனும் 12 மாத காலப்பகுதியினுள் மொத்தமாக 183 நாட்களுக்கு மேற்பட்ட காலப் பகுதி அல்லது காலப்பகுதிகளில் காணப்பட்டால் மாத்திரம்.

4. இவ்வுறுப்புரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது "நிரந்தரத் தாபனம்" எனும் சொல் பின்வருவனவற்றை உள்ளடக்கமாட்டாது.

(அ) தொழில் முயற்சியொன்றுக்குரிய பொருட்களை அல்லது வணிகப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் அல்லது காட்சிப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டும் வசதிகளைப் பயன்படுத்தல் ;

(ஆ) களஞ்சியப்படுத்துதல் மற்றும் காட்சிப்படுத்துதல் நோக்கத்திற்காக மாத்திரம் தொழில் முயற்சி ஒன்றுக்குச் சொந்தமான பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பு ஒன்றினைப் பேணுதல் ;

(இ) வேறொரு தொழில் முயற்சியின் தயாரிப்பு நோக்கத்திற்காக மாத்திரம் தொழில் முயற்சியொன்றுக்குரிய பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பு ஒன்றினைப் பேணுதல்.

(ஈ) தொழில் முயற்சிக்கான பொருட்களை அல்லது வணிகப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அல்லது தகவல்களைச் சேகரிப்பதற்காக மாத்திரம் நிலையான வியாபார நிலையமொன்றை நடாத்துதல்.

(உ) தொழில் முயற்சி ஒன்றிற்காக பூர்வாங்கமான அல்லது துணைத் தன்மையினைக் கொண்ட வேறு ஏதேனும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக மாத்திரம் நிலையான வியாபார நிலையம் ஒன்றை நடாத்துதல்.

(ஊ) இப்பந்தியின் (அ) முதல் (உ) வரையான உப பந்திகளில் கூறப்பட்டுள்ள ஏதேனும் நோக்கங்களின் தொகுதியொன்றை மேற்கொள்வதற்காக மாத்திரம் நிரந்தர வியாபார நிலையமொன்றை கொண்டு நடாத்துமிடத்து அவை அந்நோக்கங்களுக்காக பூர்வாங்க அல்லது துணைத் தன்மையினைப் பெறுதல். எவ்வாறாயினும், தொழில் முயற்சிக்கு அத்தொழில் முயற்சியின் வியாபாரத்தை முழுமையாக அல்லது ஒரு பகுதியாக கொண்டு நடாத்தும் வியாபார நிலையம் ஒன்று மற்றைய ஒப்பந்த அரசில் காணப்படுமாயின் (அ) மற்றும் (ஆ) உப பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டா.

5. 7 ஆம் பந்தி ஏற்புடையதாகும் சுதந்திர நிலையிலுள்ள முகவரொருவரைத் தவிர எவரேனும் ஆளொருவர் ஒப்பந்த அரசு ஒன்றில் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றுக்காகச் செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில்,

(அ) அவ் ஆளின் செயற்பாடுகள் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளால் வரையறை செய்யப்பட்டதும், நிலையான வியாபார நிலையம் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்படுமிடத்து அந்த வியாபார நிலையம் அப்பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் நிரந்தரத் தாபனமாக ஆக்கப்படாததுமான செயற்பாடாக இருந்தால் அன்றி, தொழில் முயற்சியின் சார்பில் ஒப்பந்தங்களைச் செய்வதற்கு அதிகாரம் பெற்ற, அவ் ஒப்பந்த அரசில் அவ் அதிகாரத்தை ஒரு வழக்கமாக செயற்படுத்தக்கூடிய ஆளொருவர், அல்லது

(ஆ) அவ்வாறான அதிகாரம் இல்லாதவிடத்தும், முதலில் குறிப்பிட்ட அரசில் வழக்கமான முறையில் கொண்டு நடாத்துகின்ற பொருட்கள் அல்லது வணிகப் பொருள் கையிருப்பு ஒன்றின் மூலம் தொழில் முயற்சியின் சார்பில் பொருட்கள் அல்லது வணிகப் பொருட்களை விநியோகிக்கும் ஆளொருவர்,

(இ) தொழில் முயற்சி அல்லது தொழில் முயற்சியினால் கட்டுப்படுத்தப்படும் அல்லது போதியளவில் கட்டுப்பாட்டு உரிமையைக் கொண்டுள்ள பிறிதொரு தொழில் முயற்சிக்காக முதலில் குறிப்பிடப்பட்ட அரசில் வழக்கமான முறையில் கொள்வனவுக் கட்டளைகளைப் பொறுப்பேற்கும் ஆளொருவர்,

ஆக இருப்பின் தொழில்முயற்சிக்காகப் பொறுப்பேற்கும் ஏதேனும் செயற்பாடுகள் தொடர்பில் அத்தொழில் முயற்சிக்கு முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் நிரந்தரத் தாபனம் இருப்பதாக 1 ஆம் 2 ஆம் இரண்டாம் பந்திகளின் ஏற்பாடுகளைக் கவனத்தில் எடுக்காதுகருதுதல் வேண்டும்.

6. மேற்குறித்த சாதாரண நடைமுறைகளுக்கு இணங்கச் செயற்படும் தரகர் ஒருவர், சாதாரண கொமிஸ் முகவர் அல்லது சுயாதீன நிலையைக் கொண்ட வேறு எவரேனும் முகவர் ஒருவரின் ஊடாக ஒப்பந்த அரசு ஒன்றில் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற காரணத்தினால் மாத்திரம் அவ் அரசினுள் மற்றைய ஒப்பந்த அரசின் நிரந்தரத் தாபனம் ஒன்று காணப்படுவதாகக் கருதக் கூடாது. எவ்வாறாயினும் அத்தகைய முகவர் ஒருவரின் செயற்பாடுகள் அத்தொழில் முயற்சியின் சார்பில் முழுமையாக அல்லது பிரதானமாக அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற போது முகவருக்கும் தொழில்முயற்சிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்புகளற்ற ஆட்கள் மத்தியில் நடைபெறும் முறையிலான நிபந்தனைகளின் கீழ் மேற்கொள்ளப்படுவதில்லை என்று கூறப்பட்டிருப்பின், இப்பந்தியின் கருத்தின்படி அவர் சுதந்திர நிலையிலுள்ள ஒரு முகவராகக் கருதப்படக் கூடாது.

7. மறு காப்புறுதி தொடர்பில் அன்றி, ஒப்பந்த அரசு ஒன்றின் காப்புறுதித் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரம் மேற்கொள்ளுமாயின் அல்லது 6 ஆம் பந்தி ஏற்புடையதாகும் சுதந்திர நிலையிலுள்ள பிரதிநிதி ஒருவரைத் தவிர வேறு ஆளொருவர் ஊடாக அந்நிலப் பிரதேசத்தினுள் காணப்படும் அபாயங்களுக்காகக் காப்புறுதி செய்வாராயின், இவ் உறுப்புரையின் முன்னைய ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது அதற்கு மற்றைய ஒப்பந்த அரசில் நிரந்தர தாபனம் ஒன்று உள்ளது என்று கருதுதல் வேண்டும்.

8. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் கம்பனியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் கம்பனியொன்றை நிர்வகித்தல் அல்லது அத்தகைய கம்பனியொன்றினால் நிர்வகிக்கப்படுதல் (நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக அல்லது வேறு ஏதேனும் விதத்தில்) அல்லது மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரத்தை மேற்கொள்வதனால் மாத்திரம் ஒரு கம்பனி மற்றையதன் நிரந்தர தாபனமாக அமைய மாட்டாது.

உறுப்புரை 6

அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானம்

1. ஒப்பந்த அரசு ஒன்றின் வதிபவர் ஒருவருக்கு மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள (விவசாயம் மூலம் அல்லது பயிச்செய்கையின் மூலம் கிடைக்கும் வருமானம் அடங்கலாக) அசையா ஆதனங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிக்கப்பட முடியும்.

2. "அசையா ஆதனங்கள்" என்ற சொல், சர்ச்சைக்குரிய ஆதனம் அமைந்துள்ள அரசின் சட்டத்தின் கீழ் அவ்வாசகம் கொண்டுள்ள கருத்திலேயே காணப்படுதல் வேண்டும். எத்தகைய சந்தர்ப்பத்திலும் இவ் வாசகத்தில் உள்ள அசையா ஆதனங்களில் அடங்கும் ஆதனங்கள், கால்நடைகள் மற்றும் விவசாயத்தின் போதும் காடாக்கத்தின் போதும் பயன்படுத்தும் உபகரணங்கள், காணிகள் சொத்துக்கள் தொடர்பில் சாதாரண சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும் உரிமைகள், அசையா ஆதனங்களின் ஆட்சியுரிமை, கனிப்பொருட் படிமங்கள், மூலங்கள் மற்றும் ஏனைய இயற்கை வளங்கள் தொடர்பில் வேலை செய்வதற்கு அல்லது வேலை செய்வதற்கான உரிமைக்கான மாற்றமடையக் கூடிய அல்லது நிலையான கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும். அத்துடன் படகுகள், விமானங்கள் என்பன அசையா ஆதனங்களாகக் கருதப்படக் கூடாது.

3. அசையா ஆதனங்களை நேரடியாகப் பயன்படுத்துதல், வாடகைக்கு விடுதல், அல்லது வேறு ஏதேனும் ஒரு முறையில் பயன்படுத்துதல் என்பவற்றின் மூலம் கிடைக்கும் வருமானங்களுக்கும், இவ் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள், ஏற்புடையதாகுதல் வேண்டும்.

4. ஏதேனும் ஒரு தொழில் முயற்சியின் அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கும், சுதந்திர தனிப்பட்ட சேவைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தும் அசையா ஆதனத்திலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கும் 1 ஆம், 3 ஆம் பந்திகளுடன் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

5. இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக, "விவசாயம்" என்ற சொல் மீன் வளர்ப்பு, தயாரிப்பு, இனப்பெருக்கம் மற்றும் குறிப்பாக இறால், சிப்பி நண்டு, சிப்பி, சிப்பி மீன் என்பன உள்ளிட்ட நீரியல் இனங்களை வளர்த்தல் என்பவற்றை உள்ளடங்கியதாக அமையும்.

உறுப்புரை 7

தொழில் இலாபங்கள்

1. ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளவதாயின் அவ் ஒப்பந்த அரசில் மாத்திரமே அத்தொழில் முயற்சியின் இலாபங்கள் மீது வரி விதிப்புச் செய்ய முடியும். தொழில் முயற்சியை மேலே குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்வதாயின் தொழில் முயற்சியின் இலாபங்கள் மீது மற்றைய அரசினால் வரி விதிக்க முடியுமாயினும்,

(அ) அந்நிரந்தரத் தாபனத்திற்கும்

(ஆ) அந் நிரந்தரத் தாபனத்தின் ஊடாக மற்றைய ஒப்பந்த அரசில் விற்பனை செய்யப்படுகின்ற வகையிலேயே அல்லது அதற்குச் சமனான வகைப் பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் விற்பனைக்கும், அல்லது

(இ) அந்நிரந்தரத் தாபனத்தினால் கொண்டு நடாத்தப்படும் வியாபாரச் செயற்பாட்டு வகைகளையே அல்லது அவற்றையொத்த வகைகளை மற்றைய அரசினுள் கொண்டும் நடாத்தும் வியாபாரச் செயற்பாடுகள்

என்பவற்றுக்கு விதிப்பனவு செய்யப்பட முடியுமான அளவினால் வரையறை செய்யப்படும்.

2. 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ், ஒப்பந்த அரசு ஒன்றில் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக அம் மற்றைய ஒப்பந்த அரசில் அதன் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற சந்தர்ப்பத்தில் அந்நிரந்தரத் தாபனம் எவ்வகையான தொழில் முயற்சியாக இருப்பினும், அத்தொழில் முயற்சியுடன் அந்நிலைமை அல்லது அதற்குச் சமனான நிலைகளின் கீழ் அச்செயற்பாடுகளுக்கு அல்லது அதற்கு சமனான செயற்பாடுகளில் பூரணமாக, சுதந்திரமாக ஈடுபடுகின்ற வேறுபட்ட அல்லது தனியான தொழில் முயற்சியொன்று காணப்படுமாயின் அதற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியுமான இலாபங்கள், அந்நிரந்தரத் தாபனங்களுக்கு கிடைத்ததாக ஒவ்வொரு ஒப்பந்த அரசிலும் கருதப்படுதல் வேண்டும்.

3. நிரந்தரத் தாபனம் ஒன்றின் இலாபத்தைத் தீர்மானிக்கின்ற போது, நிறைவேற்று மற்றும் பொது நிர்வாகச் செலவுகள் உள்ளிட்ட அந்நிரந்தர தாபனத்தின் வியாபார செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை, அவை அந்நிரந்தரத் தாபனம் அமைந்துள்ள அரசில் அல்லது பிறிதொரு இடத்தில் மேற்கொள்ளப்பட்டதாக இருப்பினும் அவற்றைக் கழிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். எவ்வாறாயினும் (உண்மையாக மேற்கொள்ளப்பட்ட செலவு மீளளிப்புக்களைத் தவிர) பங்கிலாபங்கள், காப்புரிமை அல்லது வேறு உரிமைகள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்காகச் செலுத்தும் கட்டணங்கள் அல்லது அவற்றுக்குச் சமனான மற்றும் கொடுப்பனவுகள் அல்லது விசேட வடிவங்களிலான சேவைகளை மேற்கொள்ளுதல் அல்லது முகாமைக்கான கொமிஸ் ஆக அல்லது வங்கித் தொழில் முயற்சியொன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில் தவிர, நிரந்தரத்தாபனம் ஒன்றுக்குக் கடனாக வழங்கப்பட்ட பணத்தொகையின் மீதான வட்டியாக அல்லது நிரந்தரத் தாபனம் ஒன்றின் பிரதான அலுவலகத்திற்கு அல்லது அதன் வேறு அலுவலகம் ஒன்றுக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகைகள் இருப்பின் அவை தொடர்பில், எந்தவொரு கழிப்பனவையும் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. மேலும்,

(உண்மையாகவே மேற்கொள்ளப்பட்ட செலவு மீளளிப்புக்களைத் தவிர) பங்கிலாபங்கள், காப்புரிமை அல்லது வேறு உரிமைகளைப் பயன்படுத்துவதற்காகச் செலுத்தும் கட்டணங்கள் அல்லது அவற்றுக்குச் சமனான வேறு கொடுப்பனவுகள் அல்லது விசேட வடிவிலான சேவைகளை மேற்கொள்ளுதல், அல்லது முகாமைக்கான கொமிஸ் ஆக அல்லது வங்கித் தொழில் முயற்சி ஒன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தினைத் தவிர, தொழில் முயற்சியின் பிரதான அலுவலகத்திற்கு அல்லது அதன் வேறு ஏதேனும் அலுவலகம் ஒன்றுக்கு கடனாகச் செலுத்திய பணத்தொகை மீதான வட்டியாக அல்லது நிரந்தரத் தாபனம் ஒன்றினால் தொழில் முயற்சியின் பிரதான அலுவலகத்திடமிருந்து அல்லது வேறு அலுவலகம் ஒன்றிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தொகைகளை, நிரந்தரத் தாபனத்தின் இலாபங்களைத் தீர்மானிக்கின்ற போது கணக்கில் எடுத்தல் கூடாது.

4. வியாபாரத்தின் மொத்த இலாபம் அதன் பல்வேறு தரப்புக்கள் மத்தியில் பகிரப்படுகின்ற முறையை அடிப்படையாகக் கொண்டு நிரந்தரத் தாபனத்திற்குச் சேரவேண்டிய இலாபத்தை தீர்மானிப்பது, ஒப்பந்த அரசு ஒன்றில் வழக்காறாக இருக்கும் வரை, இவ் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில் உள்ள எந்தவொன்றும், அவ்வாறு வழக்காற்றின்படி மேற்கொள்ள முடியுமான பகிர்ந்தளிப்பின் ஊடாக வரி அறவிட முடியுமான இலாபத்தைத் தீர்மானிப்பதனைத் தடுக்கக்கூடாது. எனினும், பின்பற்றப்படும் பகிர்வு முறை இவ் உறுப்புரையில் உள்ளடங்கியுள்ள அடிப்படைகளுக்கு இணங்கியதான பெபேறுகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

5. ஏதேனும் நிரந்தரத் தாபனம் ஒன்றின் தொழில்முயற்சியொன்றுக்காக வெறுமனே பொருட்கள் அல்லது வியாபாரப் பொருட்களைக் கொள்வனவு செய்வதன் காரணமாக அந்நிரந்தர நிறுவனத்திற்கு ஏதேனும் இலாபங்களைச் சேர்க்கக் கூடாது.

6. அவ்வாறு செய்யாதிருப்பதற்குப் பொருத்தமான, போதியளவு காரணங்கள் இருப்பின் மாத்திரமே, மேற்குறிப்பிட்ட பந்திகளின் நோக்கங்களுக்காக ஒவ்வொரு வருடமும் ஒரே முறையின் ஊடாக நிரந்தரத் தாபனம் ஒன்றிற்குச் சேர வேண்டிய இலாபம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

7. இவ் ஒப்பந்தத்தின் ஏனைய உறுப்புரைகளில் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டுள்ள வருமான வகைகள் இலாபங்களில் உள்ளடக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவ் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் மீது இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் தாக்கம் செலுத்தக்கூடாது.

உறுப்புரை 8

கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து

1. ஒப்பந்த அரசு ஒன்றில், மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள தொழில் முயற்சியொன்று சர்வதேச போக்குவரத்தில் கப்பல் தொழிற்பாட்டின் மூலம், இலாபமீட்டுமாயின் முதலில் குறிப்பிடப்பட்ட அரசில் வரி அறவிட முடியுமாயினும், அவ்வாறு அறவிடப்படும் வரியை, அதில் 50 வீதத்துக்குச சமனான அளவினால் குறைத்தல் வேண்டும்.

2. சர்வதேச போக்குவரத்தில் விமானங்களை இயக்குவதிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மீது அவ் விமானப் போக்குவரத்தினை நடாத்துகின்ற தொழில் முயற்சி வதியும் ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்படுதல் வேண்டும்.

3. இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக, சர்வதேச போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் கப்பல்கள் அல்லது வானூர்திகளின் தொழிற்பாட்டு இலாபங்களில் பின்வரும் இலாபங்கள் குறிப்பாக உள்ளடங்கும்.

(அ) ஏதேனும் ஒரு தொழில் முயற்சி வெற்றுக் கப்பல் என்ற அடிப்படையில் குத்தகைக்கு வழங்கிய சர்வதேசப் போக்குவரத்தில் பயன்படுத்தும் கப்பல்கள் அல்லது வானூர்திகள் மூலம் அல்லது கப்பற் சரக்குகளின் போக்குவரத்திற்கு அவ்வரி சாதகமாக அமையுமிடத்து உழைக்கப்படும் இலாபம்.

(ஆ) தொழில் முயற்சியொன்று சரக்குக் கப்பற் போக்குவரத்திற்குத் துணையாக அமையும் கொள்கலன்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் உழைக்கும் இலாபம்.

4. ஏதேனும் ஒரு குழாத்தில், ஒரு கூட்டு வியாபாரத்தில் அல்லது ஒரு சர்வதேச தொழிற்பாட்டு முகவர் நிறுவனத்தில் பங்கேற்பதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் தொடர்பிலும் 1 ஆம், 2 ஆம் 3 ஆம் பந்திகளின் ஏற்புடையதாகும்.

உறுப்புரை 9

கூட்டுத் தொழில் முயற்சிகள்

1. (அ) ஒப்பந்த அரசொன்றிலுள்ள தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசிலுள்ள தொழில் முயற்சியொன்றின் முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனம் தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்கேற்கும் அல்லது ;

(ஆ) ஒரே நபர்கள் ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி ஒன்றிலும் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றின் முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனம் என்பவற்றிலும் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்கேற்கும் சந்தர்ப்பத்தில், மற்றும் அச்சந்தர்ப்பங்கள் இரண்டில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சுதந்திர தொழில் முயற்சிகளுக்கிடையில் நடைபெறும் வணிக மற்றும் நிதித் தொடர்புகள் பற்றிய நிபந்தனைகளுக்கு மாற்றமான நிபந்தனைகள் அத்தொழில் முயற்சிகள் இரண்டுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்லது விதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அந்நிபந்தனைகள் காணப்படாவிட்டால் அத்தொழில் முயற்சிகளில் ஒன்றுக்குச் சேர எனினும் அந்நிபந்தனையின் காரணமாக அவ்வாறு சேராத ஏதேனும் இலாபங்கள் இருப்பின், அவற்றை அத்தொழில் முயற்சியின் இலாபங்களில் உள்ளடக்கி அதற்கிணங்க இலாபங்கள் மீது வரி அறவிட முடியும்.

2. ஒப்பந்த அரசொன்று, தனது தொழில் முயற்சியொன்றின் இலாபத்தில் உள்ளடக்கப்படுவதும் அதற்கிணங்க வரி விதிக்கப்படுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிக்கப்பட்டதுமான இலாபத்தை, இரண்டு தொழில் முயற்சிகள் மத்தியில் ஏற்படுத்திக் கொள்ளும் நிபந்தனைகள் சுதந்திரமான தொழில் முயற்சிகள் மத்தியில் ஏற்படுத்திக் கொள்ள முடியுமான நிபந்தனைகளாகவே காணப்படுமிடத்து, முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றுக்கு கிடைக்க வேண்டியிருப்பின், அதற்கிணங்க மற்றைய ஒப்பந்த அரசில் விதிக்கப்பட்ட வரியின் அளவுக்குப் பொருத்தமான செம்மையாக்கல்களை மற்றைய அரசு மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய செம்மையாக்கலை நிர்ணயிக்கின்ற போது இவ் ஒப்பந்தத்தின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்பிலும் உரிய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அவசியமாயின் ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் தமக்குள் கலந்தாலோசித்தல் வேண்டும்.

உறுப்புரை 10

பங்கிலாபங்கள்

1. ஒப்பந்த அரசொன்றில் வதியும் கம்பனியொன்றினால் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுகின்ற பங்கிலாபங்கள் மீது அம்மற்றைய அரசில் வரிவிதிக்கப்பட முடியும்.

2. எவ்வாறாயினும், பங்கிலாபங்களைச் செலுத்துகின்ற கம்பனி வதியும் ஒப்பந்த அரசிலும், அவ் அரசின் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் அத்தகைய இலாபங்களிலிருந்து வரி அறவிட முடியுமாயினும், அப்பங்கிலாபத்தினைப் பெறுபவர் மற்றைய மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின், அறவிடும் வரியானது,

(அ) பயனுரிமையாளர், பங்கிலாபம் செலுத்தும் கம்பனியின் மூலதனத்தில் ஆகக் குறைந்தது 25 சதவீதத்தை நேரடியாகக் கொண்டுள்ள (பங்குடமையல்லாத) கம்பனியொன்றாக இருப்பின், மொத்த பங்கிலாபத்தில் 7.5 சதவீதத்தை விடவும்,

(ஆ) பங்கிலாபங்கள் செலுத்தப்படுகின்ற இலாபங்கள் தொடர்பில் கம்பனியிடமிருந்து அறவிடுவது தொடர்பில் இப்பந்தி தாக்கம் செலுத்தக் கூடாது. ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மொத்தப் பங்கிலாபத்தில் 10 சதவீதத்தை விஞ்சக்கூடாது.

3. இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ள "பங்கிலாபங்கள்" என்ற சொல், பங்குகள், "ஜுயிசொன்ஸ்" பங்குகள், ஜுயிசொன்ஸ்" உரிமைகள், மைனிங் பங்குகள், ஸ்தாபகர் பங்குகள், ஏனைய உரிமைகள், கடனல்லாத கோரல்கள், இலாபங்களில் பங்கேற்றல் என்பவற்றின் மூலம் கிடைக்கும் வருமானங்களும், பகிரும் கம்பனி வதியுனராகவுள்ள அரசின் சட்டங்களின் கீழ் பங்குகளிலிருந்து வருமானங்களும் வரிவிதிப்புக்குள்ளாவது போன்று சம வரி அறவீட்டு விதிகளுக்குட்பட்டதுமான கூட்டிணைக்கப்பட்ட உரிமைகள் ஊடாகக் கிடைக்கும் வருமானங்களையும் குறிக்கும்.

4. பங்கிலாபங்களின் பயனுரிமையாளர், ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவராக இருந்து மற்றைய ஒப்பந்த அரசில் பங்கிலாபங்களைச் செலுத்தி வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வசிப்பிட அடிப்படையில் அங்கு அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக அல்லது அங்கு அமைந்துள்ள நிரந்தர அடிப்படை ஒன்றின் ஊடாக சுதந்திரமான தனிப்பட்ட சேவை ஒன்றை அம் மற்றைய ஒப்பந்த அரசினுள் மேற்கொண்டு பங்கிலாபங்களை செலுத்துகின்ற நிலையான அடிப்படை, அந்நிரந்தரத் தாபனத்துடன் பயனுறுதிமிக்க முறையில் தொடர்புகளை ஏற்படுத்தி நிறுவப்பட்ட ஒரு கம்பனியாயின் 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டா. அத்தகைய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் இவ் ஒப்பந்தத்தின் 7 ஆம் உறுப்புரை ஏற்புடையதாகும்.

5. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் கம்பனியொன்று, மற்றைய ஒப்பந்த அரசில் இலாபம் அல்லது வருமானம் உழைக்கும் சந்தர்ப்பத்தில், அக்கம்பனி செலுத்தும் பங்கிலாபங்கள் மீது, மற்றைய அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படும் போது தவிர அல்லது அம்மற்றைய அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தொழில் முயற்சியொன்றுடன் பயனுறுதிமிக்க முறையில் தொடர்புகள் காணப்படும் போது தவிர, கம்பனியினால் செலுத்தப்படுகின்ற பங்கிலாபங்கள் தொடர்பில் எந்தவொரு வரியும் அம்மற்றைய ஒப்பந்த அரசு விதிக்காது இருக்க முடியும் என்பதுடன் கம்பனியினால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள் அல்லது பகிரப்படாத இலாபங்கள் அம்மற்றைய அரசில் எழும் இலாபங்களில் அல்லது வருமானங்களில் மொத்தமாக அல்லது பகுதியாக உள்ளடங்கியிருப்பினும் கம்பனியின் பகிரப்படாத இலாபங்கள் மீதான வரியில் உட்படுத்தாதிருக்கவும் முடியும்.

உறுப்புரை 11

வட்டி

1. ஒப்பந்த அரசு ஒன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுவதுமான கடன் உரிமைகளிலிருந்து கிடைக்கும் வட்டியின் மீது அம்மற்றைய அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. எவ்வாறாயினும், அத்தகைய வருமானத்தின் மீது அது எழும் ஒப்பந்த நாட்டிலும் அந்நாட்டின் சட்டங்களுக்கு இணங்க வரி விதிக்கப்பட முடியுமாயினும், வட்டியின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின், அவ்வாறு அறவிடப்படும் வரியின் அளவு மொத்த வருமானத்தின் 10% ஐ விஞ்சக் கூடாது.

3. 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது, ஒப்பந்த அரசு ஒன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசின் அரசாங்கம், அரசியல் உப பிரிவு ஒன்று, உள்ளூர் அதிகார சபை ஒன்று உள்ளிட்ட இலங்கை மத்திய வங்கி அல்லது அவ் அரசுக்கு அடிப்படையில் சொந்தமான அல்லது அதனால் நிர்வகிக்கப்படும் நிதித் தாபனம் ஒன்று உழைக்கும் வட்டி, முதலில் குறிப்பிட்ட நாட்டில் வரியிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

4. 3 ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக "மத்திய வங்கி" மற்றும் "அவ் அரசினால் நிர்வகிக்கப்படும் நிதி நிறுவனங்கள்" என்பது

(அ) இலங்கையின் விடயத்தில்

(i) இலங்கை மத்திய வங்கியையும்
(ii) ஒப்பந்த அரசுகளின் அரசாங்கங்களுக்கு இடையில் காலத்துக்கு காலம் உடன்பாடு காணப்படும் அதன் மூலதனம் முழுமையாக இலங்கை அரசுக்குச் சொந்தமாகவுள்ள வேறு எந்தவொரு நிதி நிறுவனத்தையும் குறிக்கும்.

(ஆ) சீசெல்ஸ் குடியரசின் விடயத்தில்

(i) சீசெல்ஸ் மத்திய வங்கியையும்
(ii) ஒப்பந்த அரசுகளின் அரசாங்கங்களுக்கு இடையில் காலத்துக்கு காலம் உடன்பாடு காணப்படும் அதன் மூலதனம் முழுமையாக சீசெல்ஸ் அரசாங்கத்துக்கு சொந்தமாகவுள்ள வேறு எந்தவொரு நிதி நிறுவனத்தையும் குறிக்கும்.

5. இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது போன்று "வட்டி" என்ற வாசகம், ஈட்டுப்பொருள் ஒன்றை அடகாக வைத்துப் பெறப்பட்ட அல்லது அவ்வாறு அடகு வைக்காது பெறப்பட்ட, கடன்காரரின் இலாபத்திற் பங்கு கொள்ளும் உரிமையைக் கொண்ட அல்லது அவ் உரிமையினைக் கொண்டிராத, அனைத்து வகையான கடன் உரிமைகள் மூலமும் கிடைக்கின்ற வருமானங்களையும் குறிப்பாக அரசாங்கப் பிணையங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களையும் முறிகள் அல்லது தொகுதிக் கடன்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களையும் குறிக்கும். இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக தாமதித்துச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கான தண்டப் பணம் வட்டியாகக் கருதப்படக்கூடாது.

6. ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவரான வட்டியின் பயனுரிமையாளர் வட்டி எழும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஊடாக வியாபாரச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துபவராக இருந்து, வட்டி செலுத்தப்படும் கடனுரிமை,

(அ) அந்த நிரந்தர தாபனத்துடன் அல்லது

(ஆ) 7 ஆம் உறுப்புரையின் முதலாம் அத்தியாயத்தின் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரச் செயற்பாடுகளுடன் உயிர்ப்பான தொடர்பைக் கொண்டிருப்பின் 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் 7 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

7. வட்டி செலுத்துபவர் ஒப்பந்த அரசாக அல்லது அதன் உள்ளூர் அதிகாரசபை ஒன்றாக அல்லது அவ் அரசில் வதியும் ஒருவராக இருக்குமிடத்து, வட்டி அவ் ஒப்பந்த அரசில் எழுவதாகக் கருதப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், வட்டி செலுத்துபவர் ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவராக இருப்பினும், இல்லாவிடினும் அவருக்கு வட்டியைச் செலுத்துவதற்கு அல்லது சேர்வதற்குரிய கடன்பெறு தன்மை மற்றும் தொடர்புடைய நிரந்தரத் தாபனம் ஒன்று அல்லது நிலையான அடிப்படை ஒன்று ஒப்பந்த அரசு ஒன்றில் காணப்படுமிடத்து நிரந்தரத் தாபனம் அல்லது நிலையான அடிப்படை அமைந்துள்ள அரசில் அவ் வருமானம் எழுவதாகக் கருதுதல் வேண்டும்.

8. செலுத்துநருக்கும் பயனுரிமையாளருக்கும் இடையில் அல்லது அவர்கள் இருவருக்கும் வேறு எவரேனும் தனியாளொருவருக்கும் இடையில் காணப்படும் விசேட தொடர்பு ஒன்றின் காரணமாகச் செலுத்தப்படும் வட்டியின் அளவு, அது செலுத்தப்படும் கடனுரிமையைக் கவனத்திற் கொண்டு, அத்தகைய தொடர்பு காணப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்துபவர், பயனுரிமையைக் கொண்டுள்ள ஆள் ஆகிய இருவரும் உடன்பட்டிருக்க முடியுமான அளவை விட விஞ்சுமாயின் இறுதியாகக் குறிப்பிட்ட அளவின் மீது மாத்திரமே இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகளின் மேலதிகப் பகுதி மீது, இவ் ஒப்பந்தத்தின் மற்றைய ஏற்பாடுகளைப் பொருத்தமான முறையில் கவனத்தில் எடுத்து ஒவ்வொரு ஒப்பந்த அரசினதும் சட்டத்திற்கு இணங்க மேலும் வரிகள் விதிக்கப்பட வேண்டும்.

உறுப்புரை 12

வேத்துரிமைகள்

1. ஒப்பந்த அரசு ஒன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுவதுமான வேத்துரிமைகள் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. எவ்வாறாயினும் அவ்வேத்துரிமைகள் மீது அவை எழும் ஒப்பந்த அரசிலும் அவ் ஒப்பந்த அரசின் சட்டத்திற்கும் இணங்க வரி விதிக்கப்பட முடியும். எனினும், வேத்துரிமைகளின் அல்லது தொழில்நுட்பச் சேவைக் கட்டணங்களின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின், அவ்வாறு அறவிடப்படும் வரி, அவ்வேத்துரிமைகளின் மொத்தப் பெறுமானத்தில் 10 சதவீதத்தை விஞ்சக் கூடாது.

3. இவ் உறுப்புரையில் பயன்படுத்தியுள்ளவாறு "வேத்துரிமைகள்" என்ற சொல் கணனி மென்பொருட்கள், சினிமாச் சுருள் திரைப்படங்கள் அல்லது வானொலி அல்லது தொலைக்காட்சி ஒளிபரப்புக்குப் பயன்படுத்தும் நாடாக்கள், ஒலிப் பதிவு நாடாக்கள் உள்ளிட்ட ஏதேனும் இலக்கிய, கலை அல்லது விஞ்ஞானப் படைப்புக்களின் வெளியீட்டு உரிமைகள், காப்புரிமைப் பத்திரங்கள், வர்த்தகச் சின்னங்கள், வடிவங்கள் அல்லது மாதிரிகள், சுவட்டு வரைபடங்கள், இரகசியப் பொருட்பட்டியலொன்றை அல்லது செயன்முறை ஒன்றைப் பயன்படுத்துவதற்கான அல்லது பயன்படுத்தும் உரிமைக்கான அல்லது தொழில்நுட்ப, வர்த்தக அல்லது விஞ்ஞான உபகரணங்களை அல்லது விஞ்ஞான, வர்த்தக அல்லது தொழில்நுட்ப அனுபவம் ஒன்றுடன் தொடர்புடைய தகவல்களைப் பயன்படுத்துவதற்கான அல்லது பயன்படுத்தும் உரிமைக்கான ஒரு அடிப்படையாகக் கிடைத்த எவ்வகையான கொடுப்பனவையும் குறிக்கும்.

4. வேத்துரிமைப் பயனுரிமையாளர் ஒப்பந்த அரசொன்றில் வதிபவராகவும் வேத்துரிமை எழும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக வியாபாரம் ஒன்றைக் கொண்டு நடாத்துபவராகவும் இருப்பின், வேத்துரிமைகள் செலுத்தப்படுவது எவ்வகையான உரிமை அல்லது ஆதனம் தொடர்பிலாயினும் அவ் உரிமை அல்லது அவ் ஆதனம் அந்நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிலையான அடிப்படையுடன் உயிர்ப்பான தொடர்பினைக் கொண்டிருப்பின், இவ் உறுப்புரையின் 1 ஆம், 2 ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகக் கூடாது. அத்தகைய சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உறுப்பரை 7 இன் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

5. (அ) வேத்துரிமைகளைச் செலுத்துபவர் அவ் அரசினுள்ளே உள்ள ஒரு அரசியல் உப பிரிவாக அல்லது ஒரு உள்ளூர் அதிகார சபையாக அல்லது அவ் அரசில் வதியும் ஒருவராக இருக்குமிடத்து, வேத்துரிமைகள் அவ் ஒப்பந்த அரசில் எழுபவையாகக் கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், வேத்துரிமைகளைச் செலுத்தும் நபர் ஒப்பந்த அரசொன்றில் வதிபவராக இருப்பினும் இல்லாவிடினும் வேத்துரிமைகளைச் செலுத்தும் பொறுப்புடன் தொடர்புடைய நிரந்தரத் தாபனம் ஒன்று அல்லது நிலையான அடிப்படையொன்று ஒப்பந்த அரசில் அவருக்குச் சொந்தமாக இருந்து, அவ்வேத்துரிமைகள் அந்நிரந்தரத் தாபனம் அல்லது நிலையான அடிப்படையினால் செலுத்தப்படுமாயின், அச்சந்தர்ப்பத்தில் நிரந்தரத் தாபனம் அல்லது நிலையான அடிப்படை அமைந்துள்ள அரசில் அவ்வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் எழுவதாகக் கருதுதல் வேண்டும்.

(ஆ) உப பந்தி (அ) வின் கீழ், அத்தகைய ஒப்பந்த அரசு ஒன்றில் அல்லது வேத்துரிமைகள் எழாத சந்தர்ப்பத்தில், ஒரு ஒப்பந்த அரசின் வேத்துரிமைகளின் பயன்பாடு, பயன்படுத்தும் உரிமை ஒரு உரிமையாக அல்லது ஒரு ஆதனமாக இருக்குமிடத்து அல்லது தொழில்நுட்பச் சேவைக் கட்டணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சேவையுடன் தொடர்புடையதாக இருக்குமிடத்து அவ் ஒப்பந்த அரசிலேயே அவ் வேத்துரிமைகள் எழுவதாகக் கொள்ளல் வேண்டும்.

6. செலுத்துபவருக்கும் பயனுரிமையாளருக்கும் இடையில் அல்லது அவர்கள் இருவருக்கும் வேறு எவரேனும் ஆளொருவருக்கும் இடையில் காணப்படும் விசேடமான தொடர்பின் காரணமாக, பயன்பாடு, உரிமை அல்லது தகவல்களைக் கவனத்திற் கொண்டு, செலுத்தப்படும் வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்பச் சேவைகளுக்கான கட்டணங்களின் தொகை, அத்தகைய தொடர்பு ஏதும் இல்லாதவிடத்து செலுத்துபவரும் பெறுபவரும் உடன்படும் சாத்தியம் கொண்ட தொகையை விட விஞ்சுமாயின், இறுதியாகக் குறிப்பிட்ட தொகைக்கு மாத்திரமே இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் இவ் உறுப்புரையின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி, கொடுப்பனவுகளில் காணப்படும் மேலதிக தொகை மீது ஒவ்வொரு ஒப்பந்த அரசினதும் சட்டத்திற்கு இணங்க வரி விதிக்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 13

மூலதன இலாபங்கள்

1. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவர், உறுப்புரை 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளதும், மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ளதுமான அசையா ஆதனங்களை பராதீனப்படுத்துவதன் ஊடாகப் பெற்ற இலாபங்கள் மீது அம்மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.

2. ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி ஒன்றுக்குச் சொந்தமான, மற்றைய ஒப்பந்த அரசில் உள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் வியாபார ஆதனங்களில் ஒரு பகுதியாகவுள்ள அசையும் ஆதனங்களை பராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மீது (அது மாத்திரம் அல்லது முழு தொழில் முயற்சியுடன்) அந்நிலையான அடிப்படையை பராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் அடங்கலாக அம் மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.

3. ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில்முயற்சியொன்று சர்வதேச போக்குவரத்தில் பயன்படுத்தும் கப்பல்கள் வானூர்திகள் உள்ளக நீர்நிலைகளில் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் படகுகளை அல்லது அத்தகைய கப்பல்களை அல்லது விமானங்கள் அல்லது படகுகளை இயக்குவதுடன் தொடர்புடைய அசையாச் சொத்துக்களை பராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மீது அத்தொழில் முயற்சியின் உயிர்ப்பான முகாமை நிலையம் அமைந்துள்ள ஒப்பந்த அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட முடியும்.

4. பெறுமதியில் 50 சதவீதத்தை விஞ்சிய தொகையொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்திருக்கும் அசையா ஆதனங்களிலிருந்து நேரடியாக அல்லது மறைமுகமாகக் கிடைக்கும் பங்குகளை பராதீனப்படுத்துவதன் மூலம் ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவர் பெற்றுக் கொள்ளும் இலாபங்கள் மீது மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

5. இவ் உறுப்புரையின் 1, 2, 3 மற்றும் 4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் தவிர எந்தவொரு ஆதனத்தையும் பராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மீது அவ் ஆதனங்களைப் பராதீனப்படுத்துபவர் வதிபவராகவுள்ள ஒப்பந்த அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட வேண்டும்.

உறுப்புரை 14

சுயாதீன தனிப்பட்ட சேவைகள்
(நீக்கப்பட்டுள்ளது)

உறுப்புரை 15

ஊழியத்தின் மூலம் கிடைக்கும் வருமானம்

1. இந்த ஒப்பந்தத்தின் 16, 18 மற்றும் 19 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர் தனது தொழில் மூலம் பெறும் சம்பளம், வேதனங்கள் போன்ற பெறுவனவுகளை மற்றைய ஒப்பந்த நாட்டில் வதியுநர் புரியும் பட்சத்தில் அன்றி மேற்குறித்த அரசில் மாத்திரம் வரி விதிப்புக்குள்ளாக்குதல் வேண்டும். அவ்வாறு தொழில் புரியும் பட்சத்தில் அந்த தொழில் மூலம் உழைக்கும் ஊதியத்தை மேற்கூறிய மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிப்புக்குள்ளாக்க முடியும்.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மற்றைய ஒப்பந்த அரசில் ஆற்றப்படும் ஊதியம் தொடர்பில் ஒப்பந்த அரசில் வதியுமொருவராற் பெறப்படும் வேதனங்களின் மீது,

(அ) அவ்வேதனத்தைப் பெறுபவர் குறித்த நிதியாண்டு ஆரம்பிக்கும் அல்லது முடிவடையும் ஏதேனும் பன்னிரண்டு மாத காலப்பகுதியினுள் மொத்தமாக 183 நாட்களை விஞ்சாத ஒரு காலப்பகுதியில் அல்லது காலப்பகுதிகளில் அந்த மற்றைய ஒப்பந்த அரசினுள் இருப்பாராயின்;

(ஆ) வேதனங்கள், மற்றைய ஒப்பந்த அரசில் வதியாத தொழில்தருநரொருவரால் அல்லது அவர் சார்பில் செலுத்தப்படுவதாயின்;

(இ) அவ்வேதனமானது, தொழில்தருநர் மற்றைய அரசில் வைத்திருக்கும் நிரந்தர நிறுவனமொன்றினால் வழங்கப்படாதவிடத்து;

மாத்திரமே முதலில் குறிப்பிடப்பட்ட அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட முடியும்.

3. இந்த உறுப்புரையின் முற்போந்த பந்திகள் எவ்வாறிருப்பினும் , ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியினால், சர்வதேசப் போக்குவரத்தில் இயக்கப்படும் கப்பல் அல்லது வானூர்தியினால் ஆற்றப்படும் ஊதியம் தொடர்பில் பெறப்படும் வேதனம், மீது அவ் அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட முடியும்.

உறுப்புரை 16

பணிப்பாளர் கட்டணங்கள்

ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர், மற்றைய ஒப்பந்த அரசில் வதிவுள்ள கம்பனியொன்றின் பணிப்பாளர் சபையின், அல்லது அதனையொத்த வேறேதேனும் பதவியை வகிப்பதன் மூலம் உழைக்கும் பணிப்பாளர் கட்டணங்கள் மற்றும் அதனையொத்த கொடுப்பனவுகள் மீது அந்த மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.

உறுப்புரை 17

கலைஞர்களும் மற்றும் விளையாட்டு வீரர்களும்

1. 15 ஆம், உறுப்புரையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒப்பந்த அரசில் வதியுமொருவர், அரங்கு, இயக்கத்திரைப்படம், வானொலி அல்லது தொலைக்காட்சி என்பவற்றின் கலைஞராக அல்லது இசைக் கலைஞராக அல்லது விளையாட்டு வீரராக மேற்கொள்ளும் தனிப்பட்ட தொழிற்பாடுகளிலிருந்து மற்றைய ஒப்பந்த அரசில் உழைக்கும் வருமானத்தின் மீது, அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

2. கலைஞர்கள் அல்லது விளையாட்டு வீரர்களின் தனிப்பட்ட முயற்சிகளிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அக்கலைஞர்களுக்கு அல்லது விளையாட்டு வீரர்களுக்கு சேராமல், வேறொருவருக்குச் சென்றடையுமிடத்து 7, மற்றும் 15 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அவ்வருமானம் அக்கலைஞரின் அல்லது விளையாட்டு வீரரின் செயற்பாடுகள் இடம்பெறும் ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

3. 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளிலிருந்து பெறப்படும், வருமானம் ஒப்பந்த அரசுகளுக்கிடையிலான கலாசார ஒப்பந்தம் அல்லது உடன்பாட்டின் கீழ், பெறப்பட்டு, அந்த விஜயத்துக்கான செலவு இரு ஒப்பந்த அரசுகளில் ஒன்றின், உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் அல்லது அரசாங்க நிறுவனமொன்றினால் கணிசமான அளவு அல்லது முழுமையாக நிதி உதவி வழங்கப்பட்டிருந்தால் மாத்திரமே அச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்ட அரசில் அவ்வருமானங்களுக்கு வரி விலக்களிக்கப்பட முடியும்.

உறுப்புரை 18

ஓய்வூதியங்கள் மற்றும் ஆண்டுத் தொகைகள்

1. 19 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒப்பந்த அரசின் வதிபவர் ஒருவருக்கு மற்றைய ஒப்பந்த அரசில் கடந்த காலத்தில் மேற்கொண்ட ஊழியத்தை அல்லது சேவையை கவனத்தில் எடுத்து அந்த மற்றைய ஒப்பந்த அரசின் மூலங்களிலிருந்து ஓய்வூதியமும் அதனையொத்த வேதனங்களும் செலுத்தப்படுமிடத்து, அத்தகைய வதிபவருக்கு அத்தகைய மூலமொன்றிலிருந்து வழங்கும் எந்தவொரு ஆண்டுத்தொகை மீதும் அம் மற்றைய அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. "ஆண்டுத்தொகை" என்ற சொல், போதுமானதும் முழுமையானதுமான கிரயத்துக்காக கொடுப்பனவு செலுத்த வேண்டும் என்ற கடப்பாடொன்றின் கீழ், பருவ கால அடிப்படையில் அல்லது ஆயுட் காலத்தில் அல்லது குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதியில் அல்லது அறியக் கூடிய ஒரு காலப் பகுதியில் பணமாக அல்லது பணப் பெறுமதியில் செலுத்தப்பட வேண்டிய ஒரு தொகையைக் குறிக்கின்றது.

3. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஒப்பந்த அரசொன்றின் சமூகப் பாதுகாப்பு முறைமைகளின் ஒரு பகுதியான பொதுத் திட்டமொன்றின் கீழ் செலுத்தப்படும் ஓய்வூதியங்கள் மற்றும் பிற கொடுப்பனவுகள் மீது அந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.

உறுப்புரை 19

அரசாங்க சேவை

1. (அ) ஒப்பந்த அரசொன்றின் அரசாங்கம் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்று அவ்வரசுக்கு அல்லது உள்ளூர் அதிகாரசபைக்கு ஆற்றப்பட்ட சேவைகளுக்காக எவரேனும் ஆளுக்குச் செலுத்தும் ஓய்வூதியம் அல்லாத சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் அதையொத்த உழைப்பூதியங்கள் மீது அவ் அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட முடியும்.

(ஆ) எவ்வாறாயினும், அச்சேவைகள் மற்றைய அரசில் ஆற்றப்பட்டிருப்பின் அந்த ஆள் -

(i) மற்றைய அரசின் நாட்டினத்தவராக, அல்லது
(ii) சேவைகளை ஆற்றும் நோக்கத்திற்காக மட்டும் அந்த அரசில் வதிபவராக மாறியிராதவராக இருப்பின்,

அத்தகைய சம்பளம், வேதனம் அதையொத்த ஊதியம் என்பவற்றின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்பட லாம்.

2. (அ) ஒப்பந்த அரசொன்றினால் அல்லது அரசியல் உப பிரிவு அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது நியதிச் சட்டச் சபையினால் உருவாக்கப்பட்ட நிதிகளிலிருந்து, அவ் ஒப்பந்த அரசுக்கு, அல்லது உள்ளூராட்சி நிறுவனத்துக்கு அல்லது நியதிச்சட்ட சபைக்கு வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் செலுத்தப்பட்ட ஏதேனும் ஓய்வூதியம் மீது அந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.

(ஆ) எவ்வாறாயினும், குறித்த ஆள் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநராகவும் அந்த நாட்டினத்தவராகவும் இருப்பாராயின் அத்தகைய ஓய்வூதியத்தின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.

3. 15, 16 மற்றும் 18 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள், ஒப்பந்த அரசுகளில் ஒன்றினால் அல்லது அரசியல் உப பிரிவினால், உள்ளூராட்சி நிறுவனத்தினால் அல்லது நியதிச் சட்டசபையொன்றினால் கொண்டு நடாத்தப்படும் ஏதாயினும் வியாபாரம் தொடர்பில் ஆற்றிய சேவைகளுக்காக வழங்கப்படும் வேதனங்களுக்கும், ஓய்வூதியங்களுக்கும் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

4. இந்த உறுப்புரையின் நோக்கங்களுக்காக "அரசாங்கம்" என்ற சொல் ஏதேனும் நாட்டின் அரசாங்கம் அல்லது ஒப்பந்த அரசொன்றின் மத்திய வங்கி என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

உறுப்புரை 20

பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்

1. மற்றைய ஒப்பந்த அரசுக்கு வருகை தருவதற்கு உடன் முந்திய காலத்தில், ஒப்பந்த அரசு ஒன்றின் வதியுநரான பேராசிரியர் ஒருவர் அல்லது ஆசிரியர் ஒருவர் அல்லது ஆராய்ச்சியாளர் ஒருவர் கற்பிப்பதற்காக அல்லது ஆராய்ச்சிகளை மேற்கோள்வதற்காக அல்லது அவ்விரு நோக்கங்களுக்குமாக அம்மற்றைய ஒப்பந்த அரசின் பல்கலைக்கழகமொன்றில் அல்லது கல்லூரியொன்றில் அல்லது அதனையொத்த வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கற்பிப்பதற்காக அல்லது ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக பெறும் எந்தவொரு வேதனத்துக்கும் அம்மற்றைய ஒப்பந்த அரசுக்கு, அவர் வருகை தந்த தினத்திலிருந்து இரண்டு வருடங்களை விஞ்சாத காலத்துக்கு அம்மற்றைய அரசில் வரி விலக்களிக்கப்பட வேண்டும்.

2. அடிப்படையாக குறிப்பிட்ட ஆளொருவரின் அல்லது ஆட்களின் தனிப்பட்ட நலன்களுக்காக ஆராய்ச்சிகளை நடாத்துவதாயின் அத்தகைய ஆராய்ச்சிகளை நடாத்துவது தொடர்பில் பேராசிரியர் ஒருவர் அல்லது ஆசிரியர் ஒருவர் அல்லது ஆராய்ச்சியாளர் ஒருவர் பெறுகின்ற உழைப்பூதியம் தொடர்பாக இவ்வுறுப்புரை ஏற்புடையதாகக் கூடாது.

3. 1 ஆம் பந்தியில் உள்ள "அங்கீகரிக்கப்பட்ட" என்ற சொல் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாடசாலைகள் அமைந்துள்ள ஒப்பந்த அரசினால் வழங்கப்படும் அங்கீகாரத்தைக் குறிக்கும்.

உறுப்புரை 21

மாணவர்கள் மற்றும் தொழில்பயிலுநர்கள்

1. ஒப்பந்த அரசொன்றுக்கு வருவதற்கு உடன் முந்திய காலத்தில் மற்றைய ஒப்பந்த நாட்டில் வதியும் அல்லது வதிந்த அத்துடன் தனது கல்வி அல்லது பயிற்சிக்காக மட்டும் முதலில் கூறப்பட்ட ஒப்பந்த அரசில் இருக்கின்ற மாணவரொருவர், பயிலுநர் ஒருவர் அல்லது தொழில் பயிலுநர் ஒருவர் தனது பராமரிப்பு, கல்வி அல்லது பயிற்சி அலுவல்களுக்காக பெறும் கொடுப்பனவுகளை அவ்வரசிற்கு புறம்பான மூலங்களில் இருந்து பெறுவதாயின், அவற்றுக்கு அந்த அரசில் வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

2. ஒப்பந்த அரசொன்றில் தற்காலிகமாக வதியும் எவரேனும் ஆளொருவர், மற்றைய ஒப்பந்த அரசின் வதிபவராகவும் முதலில் குறிப்பிட்ட அரசின் வதிபவர் ஒருவருடன் அல்லது ஊழியர் ஒருவருடன் அல்லது அத்தகைய வதிபவர் ஒருவருடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளவராகவும் இருக்குமிடத்து அல்லது மற்றைய ஒப்பந்த அரசினால் அல்லது சர்வதேச நிறுவனமொன்றின் அனுசரணையுடன் நடாத்தப்படும் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொள்பவராக அடிப்படையில்,

(அ) முதலில் குறிப்பிட்ட அரசில் வதிபவராகவும் அல்லது அத்தகைய வதிபவரொருவருடன் தொடர்பினைக் கொண்டுள்ள ஆளொருவரல்லாத ஆளொருவரிடமிருந்து தொழில்நுட்ப நிபுணத்துவ அல்லது வியாபார அனுபவங்களைப் பெறுவது ; அல்லது

(ஆ) மற்றைய அரச பல்கலைக்கழகமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் கல்வி பெறுவது, ஆகிய நோக்கங்களுக்காக தங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த ஆள் ஒரு வருடத்திற்கு மேற்படாத காலம் தனிப்பட்ட சேவைகள் மூலம் பெறும் வருமானத்துக்கு அம் மற்றைய அரசில் வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

உறுப்புரை 22

வேறு வருமானங்கள்

இந்த ஒப்பந்தத்தில் மாற்றமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலன்றி, ஒப்பந்த அரசுகளில் எந்தவொன்றிலும் நடைமுறையிலுள்ள சட்டங்கள், வருமானத்தின் மீதான வரி அறவீட்டைத் தொடர்ந்தும் கட்டுப்படுத்தும்.

உறுப்புரை 23

இரட்டை வரி விதிப்பனவினை நீக்குதல்

1. ஒப்பந்த அரசுகளில் ஏதாவதொன்றிலும் நடைமுறையிலிருக்கும் சட்டங்கள் குறித்த ஒப்பந்த அரசுகளின் வருமான வரி விதிப்பனவினை தொடர்ந்து ஆளுதல் வேண்டும். இரண்டு ஒப்பந்த நாடுகளிலும் வருமானம் வரிவிதிப்புக்குள்ளாகும் சந்தர்ப்பங்களில் இந்த உறுப்புரையின் பின்வரும் பந்திகளுக்கு அமைவாக இரட்டை வரி விதிப்பனவிலிருந்து நிவாரணம் வழங்கப்படுதல் வேண்டும்.

2. இந்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, ஒப்பந்த அரசு ஒன்றின் வதியுநர் மற்றைய ஒப்பந்த அரசில் வருமானம் உழைக்குமிடத்து மற்றைய ஒப்பந்த அரசில் வரி செலுத்தும் போது முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசு, அந்த வதியுநரின் வருமானத்தின் மீதான வரியிலிருந்து மற்றைய ஒப்பந்த அரசில் செலுத்திய வரிக்குச் சமமான தொகையை கழிப்பனவாக வழங்க வேண்டும்.

எவ்வாறாயினும், அத்தகைய கழிப்பனவு எத்தகையதாக இருப்பினும், கழிப்பனவு வழங்குவதற்கு முன்னர் கணக்கிடப்பட்ட தேவையைப் பொறுத்து மற்றைய அரசில் வரி விதிப்புக்குள்ளாகும் வருமானத்துடன் சேர்க்கக்கூடிய வருமான வரிப்பகுதியை விஞ்சக்கூடாது.

3. 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு ஒப்பந்த அரசு ஒன்றில் செலுத்தப்பட வேண்டிய எனினும் அந்த ஒப்பந்த அரசு தனது பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காகத் திட்டமிட்டுள்ள தனது சட்டத்தின் கீழ் வரி ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கியுள்ள வரிகளும் உள்ளடங்கும் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

உறுப்புரை 24

பாகுபாடு காட்டாமை

1. ஒரு ஒப்பந்த அரசின் வதியுநர்களுக்கு மற்றைய ஒப்பந்த அரசில், அந்த அரசில் சம அந்தஸ்திலுள்ள வதியுநர்களுக்கு விதிக்கப்படும் வரிகளைவிட வேறுபட்ட அல்லது சுமக்க முடியாதளவுக்கு மிகவும் கடினமான எந்தவொரு வரியினையும் அல்லது அதனுடன் தொடர்புடைய தேவைகளுக்கு விசேடமான வதிவுரிமையாகக் கருதி வரிவிதிக்கக்கூடாது.

2. ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வைத்திருக்கும் நிரந்தர நிலையமொன்றின் மீது அச்செயற்பாடுகளிலேயே ஈடுபடும் மற்றைய அரசின் தொழில் முயற்சிகள் தொடர்பில் அறவிடப்படும் வரிகளை விட குறைந்த நன்மைகளைத் தரக்கூடியவாறு மற்றைய அரசில் வரி அறவிடுதல் கூடாது.

3. ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சிகளின் மூலதனம் முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியாக மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர் ஒருவருக்கு அல்லது பல வதியுநர்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகச் சொந்தமாக இருக்குமிடத்து அல்லது நிர்வகிக்குமிடத்து முதலில் குறிப்பிட்ட அரசில் அது போன்ற வேறு தொழில்முயற்சிகள் மீது விதியாகும் அல்லது விதிக்க முடியுமான வரிகளுக்கு அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு தேவைகளுக்காக மிகவும் வேறுபட்ட அல்லது சகிக்க முடியாத அளவுக்கு கடினமான எந்தவொரு வரியையும் விதிக்கவோ அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு தேவைகளுக்காக முதலில் குறிப்பிட்ட அரசில் உட்படுத்தக் கூடாது.

4. ஒப்பந்த அரசு ஒன்று தனது வதியுநரான ஆட்களுக்கு வரி நோக்கங்களுக்காக வழங்குகின்ற தனிப்பட்ட கொடுப்பனவுகளையும் நிவாரணங்களையும் மற்றைய ஒப்பந்த அரசின் ஆட்களுக்கும் வழங்குவதற்கு இந்த உறுப்புரைகளில் குறிப்பிட்டுள்ள எந்தவொன்றின் மூலமும் கடமையாக்கப்பட்டுள்ளதாக விளங்கிக் கொள்ளக்கூடாது.

5. இந்த உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் இந்த ஒப்பந்தத்திற்குட்பட்ட வரிகள் தொடர்பில் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

உறுப்புரை 25

இருவாயினொத்த உடன்பாட்டு நடைமுறை

1. ஒப்பந்த நாடொன்றின் வதியுநர் ஒருவர், ஒப்பந்த நாடுகளில் ஒன்றின் அல்லது இரண்டினதும் நடவடிக்கைகளின் விளைவாக இவ்வுடன்படிக்கைக்கு மாற்றமான முறையில் தன் மீது வரிவிதிக்கப்படுகின்றது என அல்லது வரிவிதிக்கப்படலாம் எனக் கருதுவாராயின், அவ்வரசுகளின் வரிவிதிப்புச் சட்டங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரிகாரங்களைக் கவனத்திற் கொள்ளாது, அவர் தான் வதியும் ஒப்பந்த நாட்டின் தகுதியுடைய அதிகாரியிடம் அல்லது அவரது விடயம் 24 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் கீழ் உள்ளடங்குமாயின் அவர் வதியுநராகவுள்ள அந்த ஒப்பந்த நாட்டின் தகவுடைய அதிகாரியிடம் விளக்கங்களைச் சமர்ப்பிக்கலாம். இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக அமையாத வரிவிதிப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்குக் காரணமான செயற்பாடு தொடர்பான முதலாம் அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு வருட காலத்தினுள், அவ்விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. தகுதி அதிகாரிக்கு, அவ்வாட்சேபனை நியாயமானதாகத் தோன்றியும் தாமாக ஒரு பொருத்தமான தீர்வுக்கு வரமுடியாமலும் இருப்பின், அவர் இவ்வுடன்படிக்கைக்கு மாறான வகையிலான வரி விதிப்பைத் தவிர்க்கும் பொருட்டு மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியுடனான இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் அவ்விடயத்தைத் தீர்த்து வைக்க முயற்சிக்கலாம். எடுக்கப்படும் எந்த உடன்பாடும் ஒப்பந்த நாடுகளின் உள்ளூர்ச்சட்டத்தின் எந்த காலவரையறையையும் பொருட்படுத்தாது நடைமுறைப்படுத்தப்படும்.

3. இந்த ஒப்பந்தத்தினைப் பொருட்கோடல் செய்வது அல்லது ஏற்புடையதாக்குவது தொடர்பில் ஏதேனும் சிரமங்கள் அல்லது சந்தேகங்கள் தோன்றுமாயின் அவற்றை இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் முயற்சித்தல் வேண்டும். இவ்ஒப்பந்தத்தில் ஏற்பாடுகள் எதுவும் காணப்படாத சந்தர்ப்பங்களில் இரட்டை வரி விதிப்பினை நீக்குவது தொடர்பில் அவர்கள் கூட்டாகப் பேச்சுவார்த்தை நடாத்துதல் வேண்டும்.

4. மேலே உள்ள பந்திகளின் கருத்துக்கள் தொடர்பில் உடன்பாட்டுக்கு வரும் நோக்கில் ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் நேரடியாக ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து கொள்ள முடியும். இந்த உறுப்புரையில் கூறப்பட்டுள்ள உடன்பாட்டு நடைமுறைகளைச் செயற்படுத்துவதற்காக தகவுடைய அதிகாரிகள் பொருத்தமான இருதரப்பு நடைமுறைகளையும் நிபந்தனைகளையும், முறைகளையும் நுட்ப அறிவுறுத்தல்களையும் பெற்று மேம்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

உறுப்புரை 26

தகவற் பரிமாற்றம்

1. இந்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அல்லது நிர்வகிப்பதற்காக இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகள் தொடர்பில், ஒப்பந்தத்துக்கு முரணில்லாத உள்நாட்டுச் சட்டங்களைச் செயற்படுத்துவதுடன் தொடர்புபடுகின்றன என்று அனுமானிக்க முடியுமான தகவல்களை ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும். தகவல் பரிமாற்றம் 1 ஆம் உறுப்புரையினால் கட்டுப்படுத்தப்பட மாட்டாது.

2. 1 ஆம் பந்தியின் கீழ் ஒப்பந்த அரசொன்றுக்கு கிடைக்கின்ற எந்தவொரு தகவலையும் அந்த அரசின் உள்ளூர் சட்டத்தின் கீழ்பெறப்பட்ட அந்தரங்க தகவல்களாகக் கருத வேண்டும். முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிடப்படாத வரிகளை மதிப்பீடு செய்தல், வரிசேகரித்தல், அவ்வரிகளை நடைமுறைப்படுத்துதல், வழக்குத் தொடர்தல் அவ்வரிகள் தொடர்பான மேன்முறையீடுகள் தொடர்பில் தீர்மானம் எடுத்தல் என்பவற்றை (நீதிமன்றங்கள், நிர்வாக சபைகள் உள்ளிட்ட) அவற்றுடன் தொடர்புடைய ஆட்களுக்கு மாத்திரமே வெளிப்படுத்த முடியும். அத்தகைய ஆட்கள் அல்லது அலுவலர்கள் இத்தகவல்களை அத்தகைய நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த முடியும். அவர்கள் பகிரங்க நீதிமன்ற நடவடிக்கைகளின் போது அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்களில் அத்தகவல்களை வெளிப்படுத்த முடியும்.

3. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள், ஒப்பந்த அரசுகள் மீது பின்வரும் கடப்பாடுகளை விதியாக்கும் என்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருதக்கூடாது.

(அ) அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களுக்கும் நிர்வாக முறைக்கும், முரண்பட்ட வகையிலான நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

(ஆ) அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் அல்லது சாதாரண நிர்வாக முறையின் கீழ் பெறமுடியாத ஆவணங்கள் அரச ஆவணங்கள் மற்றும் விபரங்களை வழங்குதல்.

(இ) ஏதாயினும், வணிக, வியாபார, கைத்தொழில், வர்த்தக உயர்தொழில் இரகசியங்களை அல்லது வணிக முறைமை வெளிப்படுத்தும் தகவலை வெளிப்படுத்தல் அரச கொள்கைகளுக்கு முரணான ஏதேனும் தகவல்களை வழங்கல். (Order Public)

4. இந்த உறுப்புரைக்கு அமைவாக ஒப்பந்த அரசொன்றினால் தகவல்கள் வேண்டப்படுமாயின், மற்றைய ஒப்பந்த அரசு தனது வரிநோக்கங்களுக்காக அத்தகைய தகவல்கள் அவசியப்படாத போதிலும், வேண்டப்பட்ட தகவல்களைப் பெறுவதற்காக அத்தகவல்களைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னால் குறிப்பிட்ட வாக்கியத்திலுள்ள கடப்பாடு 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டதாக இருப்பினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த வரையறைகளின் ஊடாக ஒப்பந்த அரசு ஒன்று, வெறுமனே அத்தகைய தகவல்கள் தொடர்பில் உள்நாட்டு விடயங்களில் அக்கறையின்மையின் காரணமாக அத்தகவல்களை வழங்காதிருப்பதற்கான அனுமதியாக அதனை விளங்கிக் கொள்ளக்கூடாது.

உறுப்புரை 27

இராசதந்திர தூதுக்குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் பேராளர் பதவிகள்

இவ்வுடன்படிக்கையின் பகுதியெதுவும் சர்வதேசச் சட்டத்தின் பொது விதிகளின் கீழ் அல்லது விஷேட உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளின் கீழ் உள்ளடங்கும் இராசதந்திர தூதுக் குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் பேராளர் பதவிகளுக்குரிய நிதி ரீதியான சிறப்புரிமைகளைப் பாதிக்கக் கூடாது.

உறுப்புரை 28

நடைமுறைப்படுத்தல்

ஒப்பந்த அரசுகள் ஒவ்வொன்றும் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உள்நாட்டுச் சட்டரீதியான செயற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன என்று இராசதந்திர மட்டத்தில் கடிதங்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளப்பட்டதன் பின்னர் எழும் முப்பதாம் நாளில் இந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வருதல் வேண்டும். இவ் ஒப்பந்தம் மூலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வரிகள், செலுத்தப்பட்ட அல்லது வரவு வைக்கப்பட்ட நிதிகள், ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் எழும் சனவரி மாத முதலாம் திகதியன்று அல்லது அதன் பின் ஆரம்பமாகும் வரியாண்டில் உழைக்கப்படும் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

உறுப்புரை 29

முடிவுறுத்தல்

இந்த ஒப்பந்தமானது ஒப்பந்த அரசுகளில் ஒன்றினால் முடிவுறுத்தப்படும் வரை அமுலில் இருக்கும். ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் திகதியில் இருந்து ஐந்து வருட காலத்தின் பின்னர் வரும் எந்தவொரு பஞ்சாங்க வருடமும் பூர்த்தியடைவதற்கு ஆகக் குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னர் ஒப்பந்த அரசுகளில் ஒன்று இராசதந்திர வழிமுறைகளின் ஊடாக முடிவுறுத்துவது தொடர்பாக அறிவித்தல் ஒன்றை வழங்குவதன் மூலம் இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்த முடியும்.

இதற்கு சாட்சியாக உரியவாறு அதிகாரம் வழங்கப்பெற்ற அதிகாரிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஒரே சமமான அதிகாரங்களைக் கொண்ட சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் இணைப் பிரதிகளுடன் 2011 செத்தெம்பர் 23 ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. வரைவிலக்கனத்தில் முரண்பாடுகள் காணப்படுமிடத்து ஆங்கில உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒப்பம்/கே. எம். எஸ். கந்தெகெதர,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதி,
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசு அரசாங்கத்தின் சார்பில்.

ஒப்பம்/ஜெனிபர் மோரெல்,
வருமான ஆணையாளர்,
சீசெல்ஸ் குடியரசு சார்பில்.

மிகைச் சேர்க்கை

உறுப்புரை 13: மூலதன இலாபங்கள்

இரு நாடுகளிலும் மூலதன இலாபங்கள் மீது வரி விதிப்பதில்லை எனத் தூதுக் குழுக்கள் இரண்டும் உடன்பாடு கண்டுள்ளன. எவ்வாறாயினும், இலங்கை, சீசெல்ஸ் ஆகிய இரண்டு நாடுகளும் அல்லது அவற்றில் ஒரு நாடு அத்தகைய வரியொன்றை அறிமுகம் செய்வதற்கு உத்தேசிக்குமிடத்து, இவ் ஒப்பந்தத்தில் மூலதன இலாபங்கள் தொடர்பான உறுப்புரையொன்றை உள்ளடக்குவதற்கு இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும்போது உடன்பாடு காணப்பட்டது.

மேலும், இலங்கை மற்றும்/அல்லது சீசெல்ஸ் அரசு எதிர்காலத்தில் மூலதன இலாபமொன்றை அறிமுகம் செய்யும் சந்தர்ப்பத்தில், 90 நாட்களுக்குள் உரிய முறையில் மற்றைய அரசுக்கு அறிமுகம் செய்து அச்சட்டவாக்கத்தின் பிரதியொன்றை வழங்கும் என்றும் இரு அரசுகளினதும் அல்லது அவற்றில் ஒன்றினது கோரிக்கையின் அடிப்படையில் உறுப்புரையைத் திருத்துவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குத் தயாராவதற்கும் உடன்பாடு கண்டுள்ளன.

12- 356

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.